
உ

சிவமயம்

# அணைந்தது ஓர் தீபம்



**12.03.2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமதி தையல்நாயகி இராஜரத்தினம்



**பிறப்பு :- 1925-04-01 இறப்பு :- 2000.03.12**

## திதிவெண்பா

ஏத்துபுத் தாயிரமாம் ஆண்டுமாசித் திங்களிற்
பூத்தபூர்வ பட்சம்சேர் அட்டமியில் - தோத்தரித்தே
நல்லதையல் நாயகி(இ) ராசரத்னம் ஞாயிறுநாள்
வல்லாசன் தாள்சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன்குருடு செவிடின்றிப் பிறத்தல்" என்கிறார் ஔவையார். மானிடப் பிறவியின் மேன்மையை மேற்குறித்த வாசகம் எடுத்துரைக்கின்றது. மானிடப்பிறப்பு என்பது அரிது எனினும் பிறந்தவர்கள் வாழும் காலத்தில் மண்ணுலகில் வாழ்வாங்கு வாழும்போது அந்த வாழ்க்கை அர்த்தமுள்ளதாகின்றது.

இம்மானிடப் பிறவியிலும் "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்ற தேசியவிநாயகம்பிள்ளையின் அடிகளிற் கிணைய வாழ்வாங்கு வாழ்ந்து

"வரவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"

என்ற திருவள்ளுவரின் ஈரடியார்க்கிணைய விருந்தோம்பி நல்வாழ்வு வாழ்ந்து மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கு சென்ற தையல்நாயகி அம்மையார் இன்று எம்மிடம் இல்லை. ஆனால் அன்னாரின் சிறப்பியல்பாகிய புன்சிரிப்பு தவழ்ந்த முகத்துடன் விருந்தோம்பும் நற்பண்பு இப்பூவுலகில் நிலைத்திருக்கும்.

இலங்கை மணித்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண தீபகற்பத்தில் மூளாய் எனும் ஊரில் 1925ம் ஆண்டு ஏப்பிரல் முதலாம் திகதி இராமநாதர் சுப்பிரமணியம் சிவக்கொழுந்து தம்பதிகளுக்கு ஐந்தாவது குழந்தையாகத் தையல்நாயகி வந்துதித்தார். இவர் பெற்றோரினது அரவணைப்பிலும் சகோதரர்களான குமாரசிங்கம், கந்தசாமி, விக்னராஜா ஆகியோரினது அன்பிலும் வளர்ந்து வந்தார்.

இவர் சிறிது காலம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்ற பின் தன் தந்தையாரின் சுற்றத்தாருடன் வாழ விரும்பி கந்தரோடையில் வாழ்ந்து வரும் காலத்தில் சைவ வித்தியாசாலையிலும் கல்வி கற்றார். அதன் பின் மலாய் நாட்டிலும் சிங்கப்பூரிலும் தனது மாமனாருடனும், சிறிய தகப்பனாருடனும் வாழ்ந்து கல்வி கற்க ஏற்பட்டது. தனது பத்தொன்பதாவது வயதில் தாய்நாடு திரும்பி அதே ஆண்டாகிய 1944ம் ஆண்டு ஆவணி மாதம் கோவையூர் சித்த ஆயுள்வேத வைத்திய கலாநிதி அ.வி.இராசரத்தினம் அவர்களைத் திருமணம் செய்து கோவையம்பதியில் வாழ்ந்து வந்தார். இவரின் வாழ்க்கைத் துணைவியாராக இருந்து நான்கு ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தார். அன்னாரின் வாழ்க்கையில் சிறந்ததொரு தாயாகவும், நற்பண்புள்ள தாரமாகவும் தோளோடு தோள் நின்று, ("ஏன் ஒரு தூண் என்றே கூறலாம்") வாழ்க்கை எனும் சக்கரத்தை ஓட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமட்டுமல்ல கணவரின் குணமறிந்து தக்க நேரத்தில் தாகம், பசி ஆற்றி சகல இன்பதுன்பங்களிலும் பங்கு கொண்டு இல்லறமே நல்லறமாக வாழ்ந்தார்.

இவரின் ஆசைக்கிணங்கி கணவருடனும் பேரப்பிள்ளை, பிள்ளைகளுடன் 1990ம் ஆண்டு இந்தியா தலயாத்திரை சென்று கோயில் தரிசனங்கள் செய்ததுடன் பெங்களூரில் ஸ்ரீ சத்தியசாயி பகவானையும் தரிசித்து பகவானின் ஆசிகளையும் பெற்றுக் கொண்டார்.

நாட்டின் இனப்பிரச்சினை காரணமாய் வேதனை கலந்த சோதனைகள் பல வந்தபோதும் பலசாதனைகள் படைத்த ஒரு செம்மல். அகதிகளாக தமது உடமைகளை இழந்து இவரின் இல்லம் நாடி ஓடிவந்த போது புகலிடம் கொடுத்த பெருமை அன்னாரைச் சேரும். 1995-1996 ஆண்டு அன்னார் தமது பேரக்குழந்தைகளுடன் ஆறுமாதம் சாவகச்சேரியிலும் பத்து மாதம் சுன்னாகத்திலும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பின் 24-03-97 அவரின் ஆண்மக்களின் விருப்பத்திற்கேற்ப கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள உருத்திரா மாவத்தையில் இறுதிக்கால வாழ்க்கையை நடாத்தி வந்தார். இக்கால கட்டத்தில் அன்னார் கதிர்காமம், முன்னேஸ்வரம் போன்ற கோயில் களுக்கு தலயாத்திரை சென்று வந்தார்.

பிரமாதி வருடம் மார்ச் மாதம் 12ம் திகதி அட்டமி திதியில் (ஆங்கிலத்தில் 12.03.2000) இருதய நோய் காரணமாக "காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா" என்ற சித்தர் வாக்கிற்கமைய பாயிற்கிடவாமல் நோயால் வாடாமல் அன்னாரின் ஆசையின்படி கணவனின் மடியில் பூவோடும், பொட்டோடும் சுமங்கலியாக இறுதி மூச்சை விட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன் மற்றும் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவரின் ஆதங்கம்

அல்லும் பகலும் அறுசுவை உணவளித்து
ஆதரவாய் அரவணைத்த என் தையலே - தையல்நாயகியே!
இல்லறத்தின் இனிய ஓர் ஆறு மக்களுடன் - இன்னும்
ஈர் மூன்று பேரப்பிள்ளைகளுடன் மகிழ்வோடு வாழ்ந்து
உற்றம் சுற்றமெலாம் பெருவிருந்தோம்பி
ஊர் உலகம் புகழ வாழ்ந்த காலந்தான் மறந்திடுமோ?
எந்தனது நடைதளர்ந்த பொழுதிலும் இன்றும்
ஏறுபோல் வீறுநடைபோட வைத்தவளே
ஐயகோ! எந்தன் அன்பினிலே ஐயமேது கண்டாய்?
ஒவ்வொரு பொழுதும் உனை நினைந்து தவிக்கவைத்தனையோ
ஓ! உனக்கு ஓர் சேதியீங்கு உரைப்பேன் உறுதியாக
"சென்றுவா மங்களமாய் இன்று—ஆனால்
அங்குஅதனில் சந்திப்போம் விரைவினிலே"!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஆற்றாமை

ஆயிரம் உறவுகள் இருந்திடினும்
அன்னையின் அன்பிற்கு நிகராமோ?
ஆயிரம் பிறவிகள் பிறந்திடினும் - நம்
அன்னை மடியில் தவழ்ந்தது போலாகுமோ?

அன்னையே! நீ வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவள்

| | |
|---|---|
| **பாசத்தின்** | **பிறப்பிடம்** |
| **அன்பின்** | **அமுதசுரபி** |
| **வாஞ்சையின்** | **வசிப்பிடம்** |
| **நேசத்தின்** | **இருப்பிடம்** |
| **கருணையின்** | **சமுத்திரம்** |
| **பொறுமையின்** | **பூமித்தாய்** |
| **மென்மையின்** | **மலர்** |
| **பெண்மையின்** | **இலக்கணம்** |
| **பண்பின்** | **பாசறை** |
| **இனிமையின்** | **தேனமுதம்** |

அம்மா! உனை வார்த்தையில் கோர்த்திடத்தான் முடியுமா?
உள்ளத்துக் குமுறலை உனக்கெப்படி உரைத்திடுவோம்?

தாயே! மீண்டும் எமக்கொரு பிறவியுண்டானால்
மீண்டும் உன்மடியில் தவழ்ந்திட அருள்வாயே!

ஆச்சியோய்! தொலைபேசி தாங்கிவந்த செய்தி
தொலைதூரம் வாழ் எமக்கு
தோட்டாக்கள் பாய்ந்தது போல்
இடியாக வந்தனவோ.

ஐயகோ! இச்செய்தி பொய்யாக இருக்காதா
என்றொருவன் கேட்கையிலே
அடுத்த வந்த தொலைபேசியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துக் கூறியதே
இது பொய் அல்ல நிஜம் என்று.

கடல் தாண்டி ஓடிவந்த பொழுதினில்
கட்டிலில் கால் நீட்டி
பட்டினால் உடல் போர்த்தி
மெத்தையில் நீர் தூங்கும் அழகினை
வர்ணிக்க வார்த்தைகள் தேடுகின்றோம்.

உன் சேவை முடிந்ததென்று
உலகை விட்டு நீ மறைந்தாய்
எம் சேவை செய்வதற்கு
எமன் வழிகாட்டிவிட்டான்.

ஐயகோ! எப்படி அம்மா கூறுவோம்?
எம் அப்புபடும் அவஸ்தையை
கை கூப்பி எமை வேண்டி
கடமை எமைச் செய்ய விட்டார்
அக்கடமை சிரமேற் கொண்டு
எம்கடமை முடித்தோம் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் ஆதங்கம்

தாய்க்குத் தாயாக மாமிக்கு மாமியாக
தரணிதனில் பவனி வந்த மாதாவே

உன்னை எமன் அணுகியபோது
என்ன செய்வேன் ஏது செய்வேன்
ஏக்கம் கொண்டேன் ஏவி விட்டேன் அயலவரை
பாருங்கள் எனது மாமியாரை
தடுத்து நிறுத்துங்கள் கொடிய காலகனை
ஓடோடினேன் அழைத்துவர வைத்தியரை
எமனிடத்தில் பறித்துவிட உனது உயிரை
ஐயகோ! நானோ தோற்றுவிட்டேன்
காலகனோ வென்றுவிட்டான்.

ஓவென்று ஓலமிட மனம் ஏவிய போதும்
ஆணென்ற காரணத்தால் மௌன அஞ்சலியுடன்
மயானம் வரை பின்தொடர்ந்து
மனம் வெதும்ப அனுப்பி வைத்தேன்
எங்கள் மாசற்ற குலவிளக்கு மாமியாரை.

கடமையே கண்ணாக புலன் செலுத்தி இருந்த வேளையில்
அடித்ததோ புயல் ஒன்று தொலைபேசி ஊடாக
ஏதென்று வினாவ திலகன் கூறுகின்றார்
அம்மா! எப்படிக் கூறுவேன் காலகன் செய்த கொடுமை
எனது ஆச்சி சென்று விட்டா வெகுதூரம் எம்மைவிட்டுத்தான்

இச்செய்தி கேட்டவுடன் கணப்பொழுதில் ஓடி வந்தார் சின்னத்தம்பியரும்
கணப்பொழுதே முடிவெடுத்து விரைந்தோம், பறந்தோம் உம்பாதம் நோக்கி
அங்கே!
எப்படி எடுத்துரைப்பேன் உமதழகை
வெண்பட்டு மெத்தைதனில்
ஓர் சிவந்த ரோஜா மலர்ந்தது போல்
வதனமதில் ஓர் அமைதி
அதரமதில் ஓர் புன்னகை உடன்
சுமங்கலிக்குரிய அழகுடனே நீர் துயின்றீர் நடுவீட்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கடமை தீர்ப்பதற்கே எங்கிருந்தோ வந்தே
மயானம் வரை பின் தொடர்ந்து
விடை தந்து அனுப்பி வைத்தேன்
எங்கள் மாசற்ற குலவிளக்கு மாமியாரை.

ஈரேழரை ஆண்டுகள் ஓடி மறைந்தனவே
தங்களது திருமுகம் கண்டு
இனி எங்கு காண்போம் உமது திருமுகத்தை
எனப் புலம்புகிறா உனது அருமை மகள்
பிரணாவும் கதறுகிறான் எங்கே சென்றாய் ஆச்சி என
எப்பொழுது காண்போம் எமதாச்சி திருமுகத்தை
இப்பிறவியிலும் மறுபிறவியிலும் மறுபிறவியிலும் இல்லை
எமதாச்சி அடைந்தது மோட்சம்
என நான் விடை தந்தனுப்புகிறேன்
எங்கள் மாசற்ற குலவிளக்கு மாமியாரை.

கொடுநாகம் கொட்டியது போல்
வந்து சேர்ந்ததே ஒரு கொடுஞ் செய்தி
அக்கணத்தில் நின்றேன் இரு தோணி ஓட்டுவான் போல்
சிந்தித்து முடிவெடுத்து அனுப்பி வைத்தேன் உம் புத்திரனை
சென்று வா சென்று முடித்து வா உன் கடமைதனை
இங்கு பிரஷாந்தி வெதும்புகிறாள் எமது அப்பாச்சி எங்கு என்று
ஏது குறை விட்டோம் எமை விட்டுச்செல்வதற்கு
எழுந்திருந்து எமக்கு விடை கூற மாட்டிரோ?
உருகி உருகி அழுது உமைப் பார்த்து கேட்கின்றேன்
மறுபிறவி உண்டென்றால் உமை
மாமியாக அடைவதற்கு
சுற்றத்தார் கூறுகின்றார்
உமது விருந்தோம்பல் சிறப்பதனை
இப்புகழ் மாலையோடேயே
சென்று வா என விடை தந்தனுப்புகிறேன்
எங்கள் மாசற்ற குலவிளக்கு மாமியாரை.

அனுஷா கூறுகிறாள் ஏன் என்னை அனுப்பி வைத்தாய்
ஆரிடம் கூறுவேன் இக்கொடுமை தனை
நீர்சொல்லியிருந்தால் நின்றிருப்பேன் சிறிது காலம்
உமது மைந்தன் கூறுகிறார்
கொடுக்கவில்லை கொடுப்பனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது முகம் பார்ப்பதற்கு
தடுத்ததுவே தடைக்கல் ஒன்று
தனது கடமை செய்வதற்கு
எப்பிறவியிலும் உமை மறவாமல்
விடை தந்தனுப்புகிறேன்
எங்கள் மாசற்ற குலவிளக்கு மாமியாரை.

மணி ஒன்று ஆகியதும்
மணி அடித்து கேட்டதுவே
ஏது புதினம் என்று
கூறினாவே புதினங்கள் பல
ஆனால்!
கூறவில்லை இப்புதினம்
மணி இரண்டரை ஆகியதும்
மணி அடித்து கேட்டதுகே
ஏதென்று வினாவவே
கிடைத்ததே இச்செய்தி
ஐயகோ! இது நிஜமா அல்லது கனவா?
என வினாவினாவே யமுனாவிடம்
இச்செய்தி கேட்டவுடன்
ஓவென்று அலறி வந்தா நிரஞ்சா மருமகளும்
செஞ்சோற்றுக் கடன் தீர்க்க
அக்கடனைத் தீர்க்க
தோளோடு தோள் நின்று
தொண்டு பல செய்துமே, மயானம் வரை சென்று
அனுப்பி வைத்தா
எங்கள் மாசற்ற குலவிளக்கு மாமியாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் ஆதங்கம்

அன்னையாக தந்தையாக அனைத்துமாக இருந்து
அரவணைத்து ஆதரித்த எங்கள் அருமை ஆச்சியே!

அடிமேல் அடியெடுத்து தளர்நடை நடந்துவர
மடிமேல் எமை இருத்தி தாலாட்டுப் பாடுவீர்களே
துள்ளி விளையாடியே துவண்டுவரும் வேளையெல்லாம்
அள்ளி அணைத்து கதைபல கூறி அமுதூட்டுவீர்களே
பள்ளிக்கதையனைத்தும் ஓடிவந்து பாங்குடனே நாம் உரைக்க
எள்ளிநகையாடாது, விருப்புடனே செவிமடுப்பீர்களே - இன்னும்
தலையிடியில் தவித்த பொழுதெல்லாம் பாசமுடன் நீங்கள்
தலைதடவி விட்டவுடன் நோயனைத்தும் நொடியினிலே ஓடிடுமே!
பாசத்தில் குழைத்தெடுத்து பாங்குடனே நீங்கள் செய்யும்
பட்சணங்களின் படுருசியினை நினைத்தவுடன் - நாஊறிடுமே!
இத்தனையும் செய்கின்ற எங்கள் ஆச்சியினை
இனி எப்பிறப்பில் காண்போம்? ஏங்குகிறோம் உங்கள் பிரிவால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தையலருக்கு ஓர் நாயகி"

மனையறம் காத்த தெய்வத்திருத்தாயாக, இல்லமே வெளிச்சமாக, வாழ்வாங்கு வாழ்ந்து, அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்துள்ள டாக்டர் அ.வி.இராசரத்தினம் அவர்களின் பாசமிகு பத்தினியாரின் இழப்பு எங்கள் குடும்பத்தில் என்றும் ஆழப்பதிந்துள்ள ஒரு நிகழ்வாகும்.

எளிமையான உடை, நெற்றிநிறையத் திருநீறு, பொலிவான தோற்றம், புன்சிரிப்புத் தவழும் முகம், இவைகளே அன்னாரை அடையாளம் காண உதவுவன. அன்னார் தமது குடும்ப அங்கத்தவர்களிலும், சகோதரங்களிலும் அளப்பரிய அன்பும் பாசமும் வைத்திருந்தார்கள். தமது புருஷனின் வைத்தியத் தொழிலுக்கும் பக்க உதவியாகவும் இருந்து வந்துள்ளார்கள்.

டாக்டர் அவர்களின் ஏக தமையனாரான திரு.அ.வி.மயில்வாகனன் அவர்களின் குடும்பம் என்றும் அன்னாரை நினைவிலிருத்த வேண்டிய ஒரு அம்சம், எவ்விதம் வந்ததென்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறுவது பொருத்தமாக அமையும்.

திரு.அ.வி.மயில்வாகனம் அவர்களின் மனைவியாரும், எனது மனைவியின் தாயாருமான, காலஞ்சென்ற காந்திமதி அவர்கள் இரத்த அழுக்க நோயின் நிமித்தம், டாக்டர்களின் ஆலோசனைக்கமைவாக, நீண்ட காலமாக தமது குடும்பத்தில் நடைபெற்ற மகிழ்ச்சிக்குரியனவும் மற்றும் துக்ககரமான வைபவங்களின்போதும் பங்குகொள்ளாது எட்ட நின்று கவனித்த சமயங்களில் எல்லாம் அவவின் இடத்தை 'தாய்க்குத்தாயாக' இருந்து வேண்டிய உதவிகள், ஒத்தாசைகள் புரிந்ததை மனப்பூர்வமாகவும் நன்றியறிதலுடன் தெரிவு படுத்திக் கொள்ள வேண்டும். எனது மனைவியும் அவரிடமிருந்து அனேக உதவிகள் பெற்றுள்ளார்கள். ஆகவே இதனைக் கூறிக்கொள்வதில் எனது மனம் சாந்தி அடைகின்றது. எவ்வித நன்மையும் எதிர்பார்க்காது, தன்னை அர்ப்பணித்து உதவிகள் பல செய்துவைத்த பண்புள்ள உள்ளம். எல்லாச் சந்தாப்பங்களிலும் அக் குடும்பத்தில் ஒரு பங்காளராகவிருந்து பாடுபட்ட குஞ்சியாச்சி அவர்களை மறக்க முடியாது.

புத்தூரில் இருந்த எனது மனைவியோ அல்லது பக்கத்திலிருந்த இளைய மகளையோ திரு.அ.வி.மயில்வாகனன் மாமா அவர்கள் நேரில் பார்த்துச் சுகம் விசாரிக்கத் தவறினாலும், தம்பியார் வீட்டிற்கு ஒரு நாளைக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாகுதல் சென்று பார்த்துவரத் தவறிய நாட்களில்லை என்றே சொல்லலாம். இவர்களின் சகோதர ஒற்றுமையைக் கோப்பாய்க் கிராமத்தில் புகழ்ந்துரைக்காதவரில்லை எனலாம்.

அன்னார் கடவுள் பக்தியிலும், கோயில்களுக்குத் திருத்தொண்டுகள் செய்வதிலும் மிகவும் விருப்பமும், கிரமமும் கொண்டிருந்தார்கள். கோப்பாயில் இவர் குடியிருந்த நாற்சார் வீட்டுக்கு மேற்குப் பக்கமாக 'மாவொல்லை' என்னும் ஆதனத்தில் பல ஆண்டுகளாகத் தொழுது பரிபாலித்து வந்த வயிரவர் கோயிலில் காலையும் மாலையும் விளக்கேற்றி, அதனை கூட்டித் துப்பரவு செய்து, பூமாலை சூட்டி அலங்கரித்து வந்துள்ளார்கள். அன்னார் இன்னும் இவர் வீட்டிற்கு வடக்கேயுள்ள வெள்ளுரவைப் பிள்ளையாரையும் கண்ணகை அம்மனையும் தரிசித்து வந்துள்ளார்கள். அன்னார் கொழும்பில் வசித்த காலங்களிலும் அமரும் போதும், இருக்கை விட்டு எழும்பும் போதும் 'அப்பனே பிள்ளையாரே' என்று அடிக்கடி உச்சரிப்பதைக் காணலாம்.

தையல்நாயகி என்ற பிறப்புப் பெயரில், அந்த நாமத்திற்கு ஏற்பத், தையலரின் நாயகியாக வாழ்ந்து வந்தவரை உறவினரும் சுற்றத்தாரும், கோப்பாய் வாழ் ஊர் மக்களும் 'கந்தரோடைப்பிள்ளை' என்று செல்லப்பெயர் வைத்தும் அழைத்து வந்தனர். இது இவர்கள் கந்தரோடையைச் சேர்ந்த டாக்டர் அவர்களை விவாகம் செய்து, அவ்விடமிருந்து கோப்பாய் வந்து சேர்ந்தமையைக் குறிப்பதாகும்.

நிறைந்த பெருவாழ்வு வாழ்ந்து 'பூவோடும் பொட்டோடும்' சோதியிற் கலந்த, அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

கொழும்பு - 04 **சதா.லோகேஸ்வரன்**
22.03.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை

பெருமதிப்பிற்குரிய டாக்டர்.அ.வி.இராசரத்தினம் ஐயா அவர்களின் மனைவி திருமதி.தையல்நாயகி(உலகமாதா) அக்கா அவர்கள் 12.03.2000 அன்று இறைவனடி சேர்ந்தார் என்று கேள்விப்பட்டு நாம் ஆழ்ந்த கவலையடைந் தோம். அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்ற முடியாமல் இருந்தமை மேலும் கவலையளித்தது. அன்னார் எமது ஊராகிய மூளாய்ப்பதியின் உடையார் குடும்பத்தில் தோன்றி கோப்பாய் விசுவநாதர் மகன் டாக்டர்.இராசரத்தினம் அவர்களை மணந்து நிறைவாழ்வு கண்ட பெருந்தகை. எப்பொழுதும் புன்னகை தவழும் வதனம், எல்லோரையும் அன்புடன் அரவணைக்கும் பாங்கு, இனிய மொழியால் கோபமடைந்தவர்களையும் கனிய வைக்கும் தன்மை ஆகிய உயரிய பெரும் பண்புகளைக் கொண்டவர். 'மேலைத் தவத்தளவேயோகும் தான் பெற்ற செல்வம் குலத்தளவேயாகுமாம் குணம்' தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசாள்ற சொற்காத்து சோர்விலாள் பெண்' 'நிலத்திற் கிடந்தவை நீர் காட்டும், காட்டுமே குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்' என்ற வாக்கியங்களுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். வயது முதிர்ந்த காலத்திலும் கூட அவர் எப்பொழுதும் ஏதாவது ஒரு சிறு வேலையாவது செய்து கொண்டே இருப்பார். இத்தகைய உயர்ந்த குணங்களைக் கொண்ட அவரின் மறைவு அன்னாரின் குடும்பத்திற்கும் உலகத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், இராசரத்தினம் ஐயாவுக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஊர்மக்களும், உறவினர்களும் உலகமும் அவரை உலகமாதா என்றே அறியும். உலகமாதா அக்கா அவர்கள் தன் பெயருக்கு ஏற்ப உலகமாதாவாகவே வாழ்ந்து காட்டியவர். சதிபதிகளின் வாழ்க்கைக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். அவரின் பதி பக்தியினால் அவர் மோட்ச நிலையடைந்து விட்டார். யாருக்கும் எந்தவித சிரமத்தையும் கொடுக்காமல் தானும் எதுவித சிரமமின்றியும் அவர் சிவகதியடைந்தது அவர் செய்த புண்ணியங்களின் சான்றாகும். அன்னாரின் மறைவால் ஏற்பட்ட துக்கத்தை தாங்கும் சக்தியையும், மனஆறுதலையும் அன்னாரின் கணவருக்கும் குடும்பத்தவர்களுக்கும் வழங்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வைத்திய பேரறிஞர்.க.பாலசுப்பிரமணியம**
பிரதம வைத்திய ஆராச்சியாளர்
இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம்
(முன்னாள் - சுதேச மருத்துவ பணிப்பாளர்)
வடகிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும் ஸஷிவர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே.

கஜானனம் பூத கணாதி சேவிதம் கபித்த ஜம்பூ பல ஸார பக்ஷிதம்
உமா சுதம் சோக வினாச காரணம் நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கியாது மோர் குறைவிலை
கண்ணில் நல்.:.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாலோடும் பெருந்தகை இருந்ததே.

கூற்றாயின வாறு விலக்க கலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே
மூளா தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா ருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னார் கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரிர்வாழ்ந்து போதீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பண் சுமந்தபாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தான் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்தமேனி பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
யுணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயண னொடுநான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைத்து
பாரார் தொல் புகழ் பாடியுமாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## திருத்தாண்டகம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானால்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப் பட்டாள் நங்கை தலைவன் தானே.

## திருமந்திரம்

சிவசிவ என்கிலார் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரும் மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## அபிராமி அந்தாதி

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவராத நட்பும்
கன்றாத வழமையும் குன்றாத இளமையும்
கழுபிணியில்லாத உடலும்
சலியாத மனமும் அன்(பு) அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோனாத கோலுமொரு
துன்பமில்லா வாழ்வும்
துய்ய நின் பாதத்தின் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே!

## வாழ்த்து

ஆறிரு தடந்தோழ் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வா
தக ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந பரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை



# திருவாசகம் - சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

*தொல்லை யிரும்பிறவி சூழும் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை*
*மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவா சகம் என்னுந் தேன்.*

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்கு சேயோன் றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குங் சீரோன் கழல் வெல்க
ஈச னடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமல னடி போற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பணியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணுறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்த்
செல்லாஅ நின்றயித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறிநின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோறும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தானி லாத சிறியேற்கு நல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத்துள் ளொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓஎன்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலங்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை



# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்து - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

### குறல் வெண்பா

அமரரிடம் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

### நிலமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக்காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவே வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹன பவச ரரரர ரரர
ரிஹன பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடையுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன்நித்தமும் மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறடி நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணிபூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்தநற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகு வேல்காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல்காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருந்தோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்ணைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியினைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினல் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிய செருக்கும் ஓட்டியபாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்ட துவோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனழத்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிது டனிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கம் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ளன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைக்
பாடினேன் நாடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடையான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கிப்
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மொத்த மெத் தாக வேலாயுதனார்
நித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னிகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதும் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தெங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனை இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயிலட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙண்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடலோ ரெம்பாவாய்.

அன்னை இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவர் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோண் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழனுங் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையெலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகமும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங்களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியா
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன் பால்தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தமைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றாற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல மெல்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணாற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலொ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் முய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

* எம் தலைவி இறப்பைத் தழுவிய வேளை ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர், சித்தவைத்தியத் துறையினர், சிவாச்சாரியார், டாக்டர் ஆகியோருக்கும்

* தொலைபேசி, தந்தி, கடிதம் ஆகியவை மூலம் அனுதாபம் தெரிவித் தோருக்கும்

* கண்ணீரஞ்சலி மூலம் அஞ்சலி தெரிவித்தோருக்கும்,

* உடலுழைப்பு வழங்கியோருக்கும்,

* அந்தியேட்டி வீட்டுக்கிரிகைகளிற் பங்கு பற்றியோருக்கும்,

* அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வேண்டுதல் செய்த அனைவருக்கும்

* குறுகிய கால வேளையில் இந்த நினைவேட்டினை அச்சிட்டுதவிய விஜயா அச்சகத்தாருக்கும்

அன்னார் சார்பாக எம் நன்றிகள்.

12/1, 57வது ஒழுங்கை,
கொழும்பு - 06.
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

*கணவன், மக்கள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Vijaya Press (Pvt) Ltd. Colombo - 15.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org